**கிளிநொச்சி மாவட்டத்தின் பத்து கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்கள் - 2022**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 கிளிநொச்சி மாவட்டத்தின் பத்து கமநல சேவைகள் நிறைவேற்றுக் குழுக்களின் பத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 2022 ஆண்டிற்கான கிளிநொச்சி மாவட்டத்தின் 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்கள் தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், அந்த 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களுக்கும் முனைப்பளிப்புள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டதுடன், அதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டிற்கான 07 கமநல சேவை செயற்குழுக்களின் ஏக்கர்வரி நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 3,513,520 நிதிக்கூற்றுக்களில் வருமதியாக காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டுகளில் வருமதியாகவுள்ள ஏக்கர் வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிக்கூற்றுக் களில் காட்டப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் சிறு போகம், காலபோகத்திற்கான உர விநியோக்கின் போது உரம் இறக்குவதற்கான கூலிகள் கூட்டுமொத்தம் ரூபா 1,664,150 ஏழு நிறைவேற்றுக் குழுக்களினால் செலுத்தப்பட்டிருந்தது. அக்கூலிகள் நிதிக்கூற்றுக்களில் முற்றாக விடுபட்டிருந்தது. | கால போக கையாளுகைச்செலவு திணைக்களத்திலிருந்து மீளளிப்பதாக எதுவித உறுதிப்பாடும் வழங்கப்படாமையால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | நிதிக்கூற்றுக் களில் காட்டப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.3.2 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிலையங்களில் வருமதி மற்றும் சென்மதி மீதிகளான கூட்டுமொத்தம் | தொடர்ந்து வரும் நிதியாண்டுகளில் | குறித்த மீதி தொடர்பில் தகுந்த |

| | | |
|---|---|---|
| ரூபா 27,793,140 காட்டப்பட்டிருந்த போதிலும் அவற்றினை உறுதிப்படுத்துவதற்கு போதிய சான்றுகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்காமை யினால் அவற்றினை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது. | இணைக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சான்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.4 இணக்கமின்மைகள்

#### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2020 ஜுன் 25 ஆம் திகதிய 08/2020 ஆம் இலக்க கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் சுற்றறிக்கை | 10 கமநல சேவை நிறைக்குழுக்களின் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய பிணைப்பணம் அறவிடப் பட்டிருக்கவில்லை. | பிணைப்பணம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | **2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி அதிகாரச் சட்டம்** | | | |
| | (i)பிரிவு 44 (1) | கமக்காரர் அமைப்புக்கள் ஒவ்வொன்றினதும் கணக்குகள் கமநல ஆணையாளர் நாயகத்தினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியால் பரிசீலனை செய்யப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள போதும் 10 கமநல சேவை நிறைக்குழுக்களின் கணக்குகள் பரிசீலனை செய்யப் பட்டிருக்கவில்லை. | கமக்கார அமைப்புக்களின் கணக்குகள் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரால் பரிசீலனை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டப் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| | (ii)பிரிவு 52 | 10 கமநல சேவை நிறைக்குழுக்களின் கமநல அபிவிருத்தி பிரதேசத்திற்காக விவசாயத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவி | செயற்படு திட்டமானது எதிர்வரும் ஆண்டுகளில் கமநல சேவை குழுக்களினால் தயாரிப்பதற் கான நடவடிக்கைகள் | சட்டப் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ல்லை. | மேற்கொள்ளப்படும். | |
| (iii)பிரிவு 53 | 10 கமநல சேவை நிறைக்குழுக்களின் கமத்தொழிற் காணிகளின் பதிவேடுகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | கமத்தொழிற் காணிகளின் பதிவேடுகள் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சட்டப் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |
| (iv)பிரிவு 55 | 10 கமநல சேவை நிறைக்குழுக்களின் நிலையத்தின் நிர்வாகப் பிரதேசத்திலுள்ள கமத்தொழிற் காணிகளை நில அளவை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | காணிகளை நில அளவை செய்யும் நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. | சட்டப் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான 10 நிறைவேற்றுக் குழுக்களின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 24,842,397 தொகை மிகையொன்றாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,262,419 தொகையாக காணப்பட்டது. அதன்படி, நிதிப்பெறுபேறுகளின் ரூபா 21,579,978 இற்கான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 08 நிறைவேற்றுக் குழுக்களினால் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் ஆகியோர்களின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் முறையான மனிதவள திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டிருக்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | இனிவரும் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும் | மனிதவள திட்டமிடல் முறையாக மேற்கொள்ளப் பட்டு விபரங்கள் சமர்ப்பிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

### 3.2 வாகன முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 நிறைவேற்றுக் குழுக்களினால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் வட மாகாண பிரதம செயலாளினால் 2010 ஆம் ஆண்டு நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 98 உழவு இயந்திரங்கள் நிலையத்தினால் உபயோகிக்கப்பட்டு தற்போது பழுதுபார்த்தல் | திருத்தம் செய்யக்கூடிய உழவுஇயந்திரங்க ள் திருத்தம் செய்வதுடன் பாவனை அற்ற | வாகனங்களை பாவனைக்குட்ப டுத்துவதற்கும் அவற்றின் உரித்தினை உறுதிப்படுத்துவ |

| | | |
|---|---|---|
| மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காது கடந்த 13 ஆண்டுகளாக வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் அவற்றின் உரித்தினை உறுதிப்படுத்தக்கூடிய வாகன பதிவு புத்தகங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. | உழவு இயந்திரங்கள் ஏலவிற்பனைக்கான முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. | தற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

**4 கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 நிதி அறிக்கைகளை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 31 மார்ச் 2023 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 02 நிறைவேற்றுக் குழுக்களினால் குறிப்பிட்ட திகதியில் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. | இனி வரும் காலங்களில் உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் உரிய திகதிக்குள் சமர்ப்பிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

**4.2 வருடாந்த செயற்பாட்டுத்திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் 2020 சனவரி 01 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க கமநலஅபிவிருத்தித் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.போதிலும் கமநல சேவை நிலயத்தினால் மீளாய்வாண்டில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டில் மீளாய்வாண்டிற் கான வருடாந்த செயல்திட்டம் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

**4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 09 கமநல சேவை நிறைவேற்றுக் குழுக்களினால் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினது 1981 ஒக்டோபர் 16 ஆம் திகதிய 107 ஆம் இலக்கமிடப்பட்ட சுற்றறிக்கையின் பந்தி 09 இன் பிரகாரம் 01 தொடக்கம் 16 வரையான வருமானங்கள் சரிவர இனங்காணப்பட்டு மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான வருமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டில் மீளாய்வாண்டிற் கான வருமான மதிப்பீடு தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

**4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் | தொடர்ந்து வரும் வருடங்களில் | நிலைபேறான அபிவிருத்தி |

| | | |
|---|---|---|
| சட்டத்திற்கமைவாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை (2030 ஆம் ஆண்டில்) அடைந்து கொள்ளும் பொருட்டு கமநல சேவைகள் நிலையங்களினால் வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகள், அவ் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக செயற்படுத்தப்பட வேண்டியவைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்களை அளந்து கொள்வதற்கான குறிகாட்டிகள் என்பன 05 ஆண்டுகளாக அடையாளம் காணப்பட்டுச் செயற்படுத்தப் படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு செயற்பாடுகள் அடையாளம் காணப்பட்டு செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | இலக்குகளை அடைந்து கொள்வதற்கு செயற்பாடுகள் அடையாளம் காணப்பட்டு செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**5. கமநல வங்கி**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அக்கராயன்குளம் கமநல சேவை நிறைவேற்றுக் குழுவில் 03 கமக்காரர் அமைப்புக்களைச் சேர்ந்த 41 விவசாயிகளுக்கு 2021 ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 1,700,000 பெறுமதியான விவசாயக் கடன்கள் 2022 !ன் 30 இற்குள் அறவிடப்பட்டிருக்க வேண்டியிருந்தும் அவற்றுள் ரூபா 240,000 பெறுமதியான கடன்கள் அறவிடப்பட்டிருக்காது நிலுவையாக உள்ளமை அவதானிக்கப் பட்டுள்ளது. | ரூபா 1,295,000 கடன் அறவிடப் பட்டுள்ளது. மீதி 240,000 அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ரூபா 240,000 கடன்களை உரிய காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |